**டிசம்பர் – 10**

# TNPSC துளிகள்

- ❖ தமிழ்நாட்டில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தில் (KKNPP) மூன்றாம் அலகின் ஆரம்ப கால எரிபொருள் நிரப்பலுக்கான அணு எரிபொருளை ரஷ்யாவின் ரோசாட்டம் நிறுவனம் வழங்கத் தொடங்கியுள்ளது.
- ❖ லாக்மே மற்றும் வெஸ்ட்சைடு சில்லறை விற்பனை நிறுவனங்களின் முன்னாள் தலைவரான சைமன் டாடா சமீபத்தில் காலமானார்.
- ❖ அருகி வரும் இந்திய நீர் கிழிப்பான் பறவைகளைப் பாதுகாப்பதற்காக BNHS அறிவியலாளர் பர்வீன் ஷேக் 2025 ஆம் ஆண்டு சரணாலய வனவிலங்குச் சேவை விருதை வென்றுள்ளார்.
    - ○ சம்பல் சரணாலயத்தில் அவரது சமூகம் தலைமையிலான 'நெஸ்ட் கார்டியன்' முன்னெடுப்பு ஆனது பறவைகளின் உயிர்வாழ்வை சுமார் சுழிய நிலையிலிருந்து 60 சதவீதமாக உயர்த்தியது.
- ❖ ஜூலை-செப்டம்பர் மாத காலாண்டின் (Q2 FY26) இறுதியில் இந்தியாவின் மொத்த இணைய சந்தாதாரர் எண்ணிக்கை 1,017.81 மில்லியனாக உயர்ந்தது.
    - ○ அதில், 44.42 மில்லியன் சந்தாக்கள் கம்பி வட இணைப்புகள் மற்றும் சுமார் 973.39 மில்லியன் இணைப்புகள் கம்பிவடம் சாரா இணைப்புகள் ஆகும்.
- ❖ ரல்லினா பேரினத்தின் புதிய இனமான கிரேட் நிக்கோபார் கானாங்கோழி இனமானது சமீபத்தில் கிரேட் நிக்கோபார் தீவில் தென்பட்டது என்பதோடு இது ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மூன்றாவது முறையாக தென்பட்டுள்ளதைக் குறிக்கிறது.
    - ○ இந்தப் பறவை ஆனது, பெரும்பாலும் ஈரநிலங்கள் மற்றும் நீரோடைகளுக்கு அருகில் அடர்த்தியான வெப்பமண்டல மழைக்காடுகளின் அடிவாரப் பகுதிகளில் வாழ்கிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


### T.N. Rising உச்சி மாநாடு 2025




- ❖ மதுரையில் நடைபெற்ற T.N. Rising (தமிழ்நாடு வளர்கிறது) உச்சி மாநாட்டில் 36,660 கோடி ரூபாய் மதிப்புள்ள 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

- தமிழ்நாடு அரசானது, நான்கு ஆண்டுகளில் 11.38 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான உறுதிப்பாடுடன் கூடிய முதலீடுகளைப் பெற்று, 34 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கியது.
- மதுரை பிராந்தியம் ஆனது, புதிய தொழிற்சாலைத் திட்டங்கள் மூலம் 56,766 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- விருதுநகரில் சுமார் 1,894 கோடி ரூபாய் மதிப்பில் PM MITRA (பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை) ஜவுளிப் பூங்கா கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- தேனியில் ஒரு பொறியியல் பூங்கா மற்றும் உணவுப் பூங்கா மற்றும் சிவகங்கையில் ஒரு தொழில்துறைப் பூங்காக்கள் ஆகியவை இந்தப் புதிய பூங்காக்களில் அடங்கும்.
- ஹூண்டாய் நிறுவனத்தின் கப்பல் கட்டும் திட்டம் மற்றும் பெய் ஹை நிறுவனத்தின் தோல் பொருட்கள் சாராத காலணி உற்பத்தி அலகு ஆகியவை புதிய முதலீடுகளின் ஒரு பகுதியாகும்.

## கோயில் நிலப் பரிவர்த்தனைகளுக்கான புதிய விதிகள்





- கோயில் நில விற்பனை, பரிமாற்றம், குத்தகை மற்றும் அடமானம் ஆகியவற்றிற்கான 2025 ஆம் ஆண்டு சமய நிறுவனங்களின் அசையா சொத்துக்களை அந்நியப் படுத்துவதற்கான விதிகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதியன்று அரசு உத்தரவு மூலம் இந்த விதிகள் அறிவிக்கப் பட்டன.
- கோயில் நிலத்தின் மதிப்பு ஆனது, சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டுதல் மதிப்பின் அதிகபட்ச மதிப்பைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட வேண்டும்.
- நகர்ப்புறங்களில் விற்பனை மதிப்பு 225%, 30 கி.மீட்டருக்குள் 275%, 30–50 கி.மீட்டருக்குள் 325% மற்றும் நகர்ப்புறங்களில் இருந்து 50 கி.மீட்டருக்கு அப்பால் 425% என நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.
- பரிமாற்றமாக வழங்கப்படும் நிலங்களுக்கு எந்த வில்லங்கமும் இல்லாமல் முறையான உரிமம் இருக்க வேண்டும் என்பதோடு மேலும் அவை தடை செய்யப்பட்ட அல்லது சுற்றுச்சூழல் தாங்கு திறன் மண்டலங்களில் இருக்கக்கூடாது.

- விற்பனை, பரிமாற்றம், ஐந்து ஆண்டுகளுக்கான குத்தகை அல்லது அடமானத்திற்கான முன் மொழிவுகள் அரசிதழ், மாவட்ட அரசிதழ்களில் வெளியிடப் பட வேண்டும் என்பதோடு மேலும் ஆட்சேபனைகளுக்கான பொது அறிவிப்புகள் 30 நாட்களுக்குள் வெளியிடப்பட வேண்டும்.

## தமிழ்நாடு பொம்மை உற்பத்திக் கொள்கை 2025

- மதுரையில் நடைபெற்ற TN ரைசிங் முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு அரசானது 2025 ஆம் ஆண்டு பொம்மை உற்பத்திக் கொள்கையை அறிவித்தது.
- உலகளாவிய பொம்மைச் சந்தை ஆனது 2024 ஆம் ஆண்டில் 180 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது என்பதோடு உலகளவில் இந்தியா ஒரு சதவீதத்திற்கும் குறைவான பங்கையே கொண்டுள்ளது.
- இந்தக் கொள்கையானது, இந்தியாவில் 10 பெரிய பொம்மை நிறுவனங்களை அறிமுகம் செய்து ஒரு பொம்மை உற்பத்திப் பூங்காவை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- குறைந்தபட்சம் 50 வேலைவாய்ப்புகளுடன் 50 கோடி ரூபாய்க்கு மேலான முதலீடுகள் ஆனது மூலதன மானியம் மற்றும் வரி நிவாரணம் போன்ற சிறப்புச் சலுகைகளைப் பெறும்.
- பொம்மை உற்பத்தி செய்யும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கு (MSME) 1.5 கோடி ரூபாய் வரை மானியங்கள், சம்பள ஆதரவு மற்றும் வட்டி திருப்பிச் செலுத்துதல் வசதிகள் கிடைக்கப் பெறும்.
- இந்தக் கொள்கையானது STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) நுட்பம் சார்ந்தப் பொம்மைகள், மின்னணுப் பொம்மைகள், புதிர்கள் மற்றும் சூப்பர் ஹீரோ உருவங்கள் போன்ற புதிய யுக பொம்மைகளை ஆதரிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## உலகளாவிய எரிசக்தித் தலைவர்களின் உச்சி மாநாடு 2025

- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய எரிசக்தித் தலைவர்களின் உச்சி மாநாடு (GELS) ஆனது ஒடிசாவின் பூரியில் தொடங்கப்பட்டது.
- GELS என்பது மாநிலங்களுக்கிடையேயான நீண்டகால எரிசக்தி ஒத்துழைப்புக்கான இந்தியாவின் முதல் தளமாகும் என்பதோடு இது உலகளாவிய COP உச்சி மாநாட்டை மாதிரியாகக் கொண்டுள்ளது.

- இந்த நிகழ்வின் கருத்துரு, "Powering India: Sufficiency, Balance, Innovation" என்பதாகும்.
- 2025 ஆம் ஆண்டு உச்சி மாநாட்டின் முக்கிய நோக்கம் போதிய அளவிலான ஆற்றல், சுற்றுச்சூழல் சமநிலை மற்றும் புதுமைகளை ஊக்குவிப்பதாகும்.





## இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா 2025




- 2025 ஆம் ஆண்டு இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா (IISF) நிகழ்ச்சியானது ஹரியானாவின் பஞ்ச்குலாவில் நடைபெற்றது.
- இந்த விழாவின் கருத்துரு, "Vigyan Se Samruddhi: for Aatmanirbhar Bharat" என்பதாகும்.
- உயிரித் தொழில்நுட்பம், விண்வெளி, செயற்கை நுண்ணறிவு, பாரம்பரிய அறிவு ஒருங்கிணைப்பு மற்றும் சமூகம் மற்றும் கல்விக்கான அறிவியல் ஆகியவை இதில் கவனம் செலுத்தப்பட்ட ஐந்து பகுதிகளாகும்.
- IISF 2025 ஆனது பொது மக்களின் ஈடுபாடு, அறிவியல் மனநிலை மற்றும் அமைச்சகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், தொழில்துறை மற்றும் கல்வித் துறைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை நன்கு வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆற்றுக்குருடு நோயை நீக்குதல் – நைஜர்




- உலக சுகாதார அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்கோசெர்சியாசிஸ் பாதிப்பினை ஒழித்த முதல் ஆப்பிரிக்க நாடாக நைஜர் மாறியது.
- ஆற்றுக்குருடு என்றும் அழைக்கப்படும் ஒன்கோசெர்சியாசிஸ், ஒட்டுண்ணி புழுவான ஒன்கோசெர்கா வால்வுலஸால் ஏற்படுகிறது.
- வேகமாக ஓடும் ஆறுகளுக்கு அருகில் இனப்பெருக்கம் செய்யும் பாதிக்கப்பட்ட சிமுலியம் கருப்பு ஈக்கள் கடிப்பதால் இந்த நோய் பரவுகிறது.
- பிரேசில் மற்றும் வெனிசுலாவின் சிறிய பகுதிகளில் பாதிப்புகளுடன், உலகளாவியப் பாதிப்புகளில் பெரும்பாலானவை ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி மற்றும் ஏமனில் ஏற்படுகின்றன.
- இந்த நோய் ஆனது, கடுமையான அரிப்பு, தோல்களில் மாற்றங்கள், கண் சேதம் ஆகியவற்றை ஏற்படுத்துவதோடு, மேலும் நிரந்தரப் பார்வைத் திறன் இழப்பிற்கு வழி வகுக்கும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## உடல் பருமனுக்கான GLP-1 மருந்துகள்

- கர்ப்பிணிப் பெண்களைத் தவிர்த்து, வயது வந்தவர்களில் உடல் பருமனுக்கான நீண்ட கால சிகிச்சைக்கான GLP-1 சிகிச்சைகளை அங்கீகரிக்கும் உலகளாவிய வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பு (WHO) வெளியிட்டது.
- GLP-1 சிகிச்சைகள் உணவு மற்றும் உடற்பயிற்சி சார்ந்த நடவடிக்கைகளுடன் சேர்த்து மேற்கொள்ளப்பட வேண்டும்; உடல் பருமனை நிவர்த்தி செய்ய மருந்து மட்டும் போதாது.
- மருந்து நிறுத்தப்பட்ட பிறகு செயல்திறன், பாதுகாப்பு மற்றும் விளைவுகள் குறித்த வரையறுக்கப்பட்ட நீண்டகாலத் தரவு மற்றும் அதிக செலவுகள் காரணமாக WHO ஒரு நிபந்தனை சார் பரிந்துரையை வெளியிட்டது.
- உடல் பருமன் ஆனது, முக்கிய தொற்றா நோய்கள் மற்றும் உலகளாவியப் பொருளாதாரச் செலவினங்களுக்குப் பங்களிக்கிறது என்பதோடு இது 2030 ஆம் ஆண்டிற்குள் ஆண்டுதோறும் 3 டிரில்லியன் மதிப்பினை எட்டும் என்று கணிக்கப் பட்டுள்ளது.

- உலகளவில் மலிவு விலையில் பொதுப் பெயர் மருந்துகள், காப்பீட்டு வழங்கீடு மற்றும் ஒருங்கிணைந்த உடல் பருமன் மேலாண்மை நடவடிக்கை அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்து, இந்த மருந்துகளுக்கான சமமான அணுகலை WHO வலியுறுத்தியது.




## கடுமையான கொழுப்புசார் நோய்களுக்கான மரபணு சிகிச்சை




- இந்தச் சிகிச்சையானது, ANGPTL3 (ஆஞ்சியோபொய்டின் போன்ற 3) மரபணுவை இலக்காக வைத்து, இரத்தத்தில் குறைந்த அடர்த்தி கொண்ட லிப்போ புரதம் (LDL) மற்றும் ட்ரைகிளிசரைடு ஆகியவற்றின் அளவை ஒழுங்குபடுத்துகிறது.
- கொழுப்பு என்பது இரத்தத்தில் உள்ள கொழுப்பு போன்ற பொருள் ஆகும்.
- அதிக அளவு LDL (குறைந்த அடர்த்தி கொண்ட லிப்போ புரதம்) ஆனது இதய நோய் அபாயத்தை அதிகரிக்கிறது என்பதோடு மேலும் அதிக ட்ரைகிளிசரைடுகள் இருதய

நோய் சார்ந்த ஆபத்தையும் அதிகரிக்கின்றன.

- 15 நோயாளிகளில் நடத்தப்பட்ட ஆய்வில், அதிக அளவு மருந்தானது LDL கொழுப்பை 50% என்றும் மற்றும் ட்ரைகிளிசரைடுகளை 55% என்றும் குறைத்தது.
- இந்த அணுகுமுறை, இயற்கையாகவே செயலற்ற ANGPTL3 மரபணுக்கள் மற்றும் உடல் நலப் பிரச்சினைகள் இல்லாமல் குறைந்த அளவு கொழுப்பைக் கொண்ட 250 பேரில் ஒருவருக்கு ஏற்படும் அரிய இயற்கைப் பிறழ்வு முறையை கொண்டு உருவாக்கப் பட்டு உள்ளது.
- இந்தச் சிகிச்சையானது, கொழுப்பு மேலாண்மையின் முக்கியத் தளமான கல்லீரல் செல்களை மாற்றியமைக்க CRISPR-Cas9 மரபணு திருத்தத்தைப் பயன்படுத்துகிறது.


## உலகளாவிய கருவுறாமை குறித்த வழிகாட்டுதல்கள் 2025




- உலக சுகாதார அமைப்பானது, 2025 ஆம் ஆண்டில் கருவுறாமை குறித்த அதன் முதல் உலகளாவிய வழிகாட்டுதலை வெளியிட்டது.
- 12 மாதங்கள் அளவிலான வழக்கமான காப்பு சாராத உடலுறவுக்குப் பிறகு கர்ப்பம் அடைய தவறுவது கருவுறாமை என வரையறுக்கப்படுகிறது.
- இது உலகளவில் இனப்பெருக்க வயதுடைய 6 பேரில் ஒருவரை பாதிக்கிறது.
- இந்த வழிகாட்டுதலில் கருவுறாமை நிலையைத் தடுத்தல், அதைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சையளிப்பதற்கான 40 ஆதார அடிப்படையிலான பரிந்துரைகள் உள்ளன.
- இது தேசிய சுகாதார அமைப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்ட செலவு குறைந்த கருவுறுதல் நல சேவையை ஊக்குவிக்கிறது என்பதோடு மேலும் வாழ்க்கை முறை சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் உளவியல் சார்ந்த ஆதரவை வலியுறுத்துகிறது.
- பாதுகாப்பான மற்றும் மலிவு விலையிலான கருவுறுதல் நலச் சேவைக்கான சிறந்த அணுகலுக்காக, வழிகாட்டுதல்களை உள்ளூர்ச் சூழல்களுக்கு ஏற்ப அதனை மாற்றி அமைக்கவும், அதன் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் வேண்டி உலக நாடுகள் ஊக்குவிக்கப் படுகின்றன.

## செவ்வாய் நதிப் படுகைகளின் வரைபடம்

- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பரானா வால்ஸ் உள்ளிட்ட 16 முக்கிய பழைய நதிப் படுகைகளை அறிவியலாளர்கள் வரைபடமாக்கியுள்ளனர்.
- பள்ளத்தாக்கு வலையமைப்புகள், ஏரிகள், ஆறுகள், செங்குத்துப் பள்ளத்தாக்குகள் மற்றும் வண்டல் படிவுகளைப் பயன்படுத்தி இந்தப் படுகைகள் அடையாளம் காணப் பட்டன.
- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பெரிய வடிகால் அமைப்புகள் புவியின் பெரிய ஆறுகளைப் போலவே சுமார் 100,000 சதுர கிலோமீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவைக் கொண்டுள்ளன.
- இந்தப் பகுதிகள் பண்டைய காலத்தில் இருந்து பாயும் நீர், அரிப்பு மற்றும் வண்டல் இடம் பெயர்வு சான்றுகளைக் காட்டுகின்றன.
- பெரிய நதிப் படுகைகள் செவ்வாய் கிரகத்தில் உள்ள ஆறுகளால் அரிக்கப்பட்ட மொத்தப் பதிவுகளில் 42 சதவீதத்தினைக் குறிக்கின்றன இருப்பினும் அவை அந்தக் கிரகத்தின் நிலப்பரப்பில் 5% மட்டுமே உள்ளன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீலகிரியில் குளிர்காலப் பறவைகள்

- கோத்தகிரியில் சாம்பல்-கழுத்து கொண்ட பன்டிங் பறவை மற்றும் மசினகுடியில் கருப்புத் தலை கொண்ட பன்டிங் ஆகியவை முதல் முறையாக தென்பட்டன.
- வழக்கமான குளிர்கால வலசைப் பறவைகளும் இங்கு தென்பட்டன.
- பெரிய புள்ளிக் கழுகு மற்றும் புல்வெளிக் கழுகு போன்ற இரையைப் பிடிக்கும் பறவைகள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன.
- இந்த குளிர்காலத்தில் நீலகிரியில் வடக்கு ஊசிவால் வாத்துகள் மற்றும் மரக்கதிர்க் குருவிகள் பதிவு செய்யப்பட்டன.




## கொம்புக்கண் பேய் நண்டு – ஆந்திரப் பிரதேசம்




- கொம்புக்கண்கள் கொண்ட பேய் நண்டு, புள்ளிகளுடன் கூடிய லேசான கால்கள் கொண்ட நண்டை (பாறைப் பதுங்கி நண்டுகள்) வேட்டையாடுவதற்கான முதல் உறுதிப் படுத்தப் பட்ட நிகழ்வை ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்தனர்.
- தாழ் ஓத அலைகளின் போது ருஷிகொண்டா கடற்கரையில் இது நிகழ்ந்தது.
- பாறைப் பதுங்கி நண்டுகள் பொதுவாக பாறை பிளவுகளில் வாழ்கின்றன அதே நேரத்தில் கொம்புக்கண்கள் கொண்ட பேய் நண்டுகள் பொதுவாக மணல் பரப்புகளில் காணப்படுகின்றன.
- இந்த வேட்டையாடுதல் ஆனது அவற்றின் வாழ்விடங்களின் தற்காலிகக் குறுக்கிடல் மற்றும் கொம்புக்கண்கள் கொண்ட பேய் நண்டின் உணவு தேடும் நடத்தையின் விரிவாக்கத்தினைக் குறிக்கிறது.
- ஓசிபோட் இனத்தைச் சேர்ந்த பேய் நண்டுகள், மணல் நிறைந்த ஓத அலைகளுக்கு இடையேயான மண்டலங்களில் காணப்படும் முக்கிய இனங்கள் ஆகும்.
- இந்தியாவின் கடற்கரையில் ஆறு பேய் நண்டு இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதோடு அவற்றில், O. ப்ரீவிகார்னிஸ், O. மேக்ரோசெரா மற்றும் O. கார்டிமானஸ் ஆகிய மூன்று இனங்கள் ருஷிகொண்டா கடற்கரையில் காணப்படுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## வெறுப்பு பேச்சு மற்றும் வெறுப்பு ரீதியாக இழைக்கப்படும் குற்றங்கள் மசோதா 2025





- கர்நாடக அமைச்சரவையானது இந்த மசோதாவை அங்கீகரித்தது என்பதோடு இது பெலகாவியில் நடைபெற உள்ள அந்த மாநிலச் சட்டமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும்.
- மதம், இனம், சாதி, பாலினம், மொழி, இயலாமை அல்லது பிற காரணிகளின் அடிப்படையில் காயம், வேற்றுமை, பகைமை அல்லது வெறுப்பை உருவாக்கும் வகையில் செய்யப்படும் அல்லது பகிரப்படும் எந்தவொரு வெளிப்பாட்டையும் வெறுப்புப் பேச்சாக இந்த மசோதா வரையறுக்கிறது.
- வெறுப்பு ரீதியாக இழைக்கப்படும் குற்றத்திற்கு 1 முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் 50,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.
- மீண்டும் மீண்டும் இழைக்கப்படும் குற்றங்களுக்கு 2 முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் 1 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.
- மின்னணு/இணைய ஊடகங்கள் உள்ளிட்ட எந்த தளத்திலிருந்தும் வெறுப்பு ரீதியாக இழைக்கப்படும் குற்றம் சார்ந்த உள்ளடக்கங்களைத் தடுக்க அல்லது அகற்ற என்று அதிகாரிகளுக்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது.
- வெறுப்புப் பேச்சை குறி வைத்து குறிப்பாக சட்டம் இயற்றிய முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது.

## சைனிக் துஜே சலாம் திட்டம்


- ஆயுதப்படையானது, கொடி நாளில் 90 வயதுக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள், வீர் நாரிஸ் (இராணுவ வீராங்கனை) மற்றும் வீரத் தாய்மார்களைக் கௌரவிக்கும் திட்டத்தை அசாம் அறிமுகப்படுத்தியது.
- மாவட்ட நிர்வாகங்கள் மற்றும் சைனிக் நல அலுவலகங்கள் ஆண்டுதோறும் வீட்டு வருகைகளை நடத்தி வீரர்களின் சேவையை அங்கீகரித்து அவர்களின் நலத் தேவைகளை நிவர்த்தி செய்யும்.

- அசாமில் சுமார் 41,968 முன்னாள் இராணுவ வீரர்களும் 10,361 வீர் நாரிகளும் அதன் மூத்த இராணுவ வீரர் நல வலையமைப்பின் கீழ் ஆதரிக்கப்படுகிறார்கள்.
- முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான பயனுள்ள நல திட்டங்களுக்காக மாநில அரசு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தேசிய அங்கீகாரத்தினைப் பெற்றது.




# விளையாட்டுச் செய்திகள்

## கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் 2025




- 5வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளானது (KIUG 2025) இராஜஸ்தானில் உள்ள ஏழு நகரங்களில் நடைபெற்றது.
- இதில் சண்டிகர் பல்கலைக்கழகம் 67 பதக்கங்களுடன் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து லவ்லி புரொஃபஷனல் பல்கலைக் கழகம் (78 பதக்கங்கள்) மற்றும் குரு நானக் தேவ் பல்கலைக்கழகம் (72 பதக்கங்கள்) இரண்டாவதாகவும் இடம் பெற்றன.
- ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஸ்ரீஹரி நடராஜ், உயரம் தாண்டுதல் வீராங்கனை பூஜா சிங், வில்வித்தை வீராங்கனை அதிதி சுவாமி, மல்யுத்த வீராங்கனை மான்சி லாதர் மற்றும்

துப்பாக்கி சுடும் வீராங்கனை ஆஷி சௌக்ஸி ஆகியோர் சிறந்த விளையாட்டு வீரர்கள் பட்டத்தினை வென்றனர்.

- இந்த விளையாட்டுப் போட்டிகள், இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம், இந்திய விளையாட்டு ஆணையத்தால், கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டன.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச பொது விமானப் போக்குவரத்து தினம் 2025 - டிசம்பர் 07




- இந்த நாள் ஆனது, சர்வதேச பொது விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) ஸ்தாபனத்தைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Safe Skies. Sustainable Future: Together for All" என்பதாகும்.
- மக்களை இணைப்பதிலும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும், பாதுகாப்பான மற்றும் திறம் மிக்க உலகளாவிய விமானப் போக்குவரத்தை உறுதி செய்வதிலும் பொது விமானப் போக்குவரத்தின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- 1944 ஆம் ஆண்டு சிகாகோ உடன்படிக்கையின் தோற்றத்தைக் குறிக்கின்ற இந்த நாள் ஆனது 1996 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் (UN) அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

# இதரச் செய்திகள்

## இந்தியாவில் 2025 ஆம் ஆண்டில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்ட கூகுள் தேடல்கள்

- 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிகம் தேடப்பட்ட சொல் இந்தியன் பிரீமியர் லீக் (IPL) என்பதாகும்.
- செயற்கை நுண்ணறிவு (AI) கருவியான கூகுள் ஜெமினி இதில் அதிகம் தேடப்பட்ட இரண்டாவது சொல்லாகும்.
- ஆசியக் கோப்பை மற்றும் ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி உள்ளிட்டவை பிற முன்னணி

தேடல்கள் ஆக இடம்பெற்றுள்ளன.

- பிரபலமான AI தளங்களான Grok, DeepSeek மற்றும் Perplexity ஆகியவை பிரபலமாக உள்ள AI தேடல்களில் அடங்கும்.
- இந்தியாவில் அதிகம் தேடப்பட்ட திரைப்படம் சயாரா ஆகும்.
- உணவு தொடர்பான தேடல்களில் இட்லி மற்றும் கோண்ட் கதிரா ஆகியவை அதிகம் தேடப்பட்ட பொருட்களில் அடங்கும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★